பன்முக நோக்கில் திருத்தொண்டர் காப்பியம்

ஆய்வாளர்

ஜெ. ஜோதிமணி

ஆய்வு நெறியாளர்

முனைவர். சு. பரணி

முனைவர்பட்ட ஆய்விற்குரிய ஆய்வுச்சுருக்கம்

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,

கோயம்புத்தூர் - 43.

செப்டம்பர் 2022

ஆய்வுச் சுருக்கம்

பன்முக நோக்கில் திருத்தொண்டர் காப்பியம்

முன்னுரை

மனித ஒழுகலாறை மேம்படுத்தும் நோக்கில்தான் மொழிகளும், சமயங்களும் தோன்றி வளர்ந்தன. செம்மொழியாக விளங்கும் தமிழ் மொழியில் பக்திச் சுவை மிக்க இலக்கியங்கள் சமயக் கருத்துக்களை வலியுறுத்துகின்றன. அவற்றில் திருத்தொண்டர் காப்பியமும் ஒன்றாகும். ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வாழ்ந்து வதைக்கப்பட்டு அமரராகி இன்றும் தெய்வமாக மக்களின் உள்ளத்தில் இடம்பிடித்த நீலகண்டரின் வாழ்வியலை உள்ளடக்கி சூ. இன்னாசி அவர்களால் உருவாக்கப்பட்டதுதான் திருத்தொண்டர் காப்பியம். இக்காப்பியத்தின் வழி கற்பனையாக அல்லாமல் மனித சமூகத்தில் உயிர்ப்போடு வாழ்ந்து மனித நலனுக்காகவே தனது இன்னுயிரை நீத்த ஒரு மனிதனின் வாழ்க்கைதான் காப்பியத்தின் கருவாக அமைகிறது.

திருத்தொண்டர் காப்பியத்தில் அமைந்துள்ள இவ்வாய்வானது, காப்பியத் தன்மையில் அமைந்திருக்கின்ற பாங்கினையும், காப்பியத் தலைவனின் நேர்மை, தியாகம், நல்லொழுக்கம் முதலான தனிமனித வாழ்வியலுக்குத் தேவையான பண்புகளையும், காப்பியப் பாடல்களின் வழி அன்றைய சமூக வாழ்வையும், திருத்தொண்டர் காப்பியத்தில் தமிழ் இலக்கியத்தின் செல்வாக்கையும் ஆராய்வதாக அமைகிறது.

ஆய்வுப் பொருள்

“பன்முக நோக்கில் திருத்தொண்டர் காப்பியம்”என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்படும் இவ்வாய்வானது, நீலகண்டரின் (தேவசகாயம் பிள்ளை) வாழ்வை மையமாகக் கொண்டு திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் சமூகச்சூழலை எடுத்தியம்புவதாக உள்ளது. காப்பிய அமைப்பு, காப்பியக் களம், காப்பிய அணுகுமுறை குறித்தும், காப்பியத்தில் அமைந்துள்ள தமிழ் இலக்கியச் செல்வாக்கு மற்றும் கிறித்துவ வேதாகம அறங்கள் காப்பியத்தில் இடம் பெறுகின்ற தன்மை குறித்தும் ஆராய்வதே ஆய்வுப்பொருளாக அமைகின்றது.

ஆய்வு நோக்கம்

மனித வாழ்க்கையும் இலக்கியமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தது. மனித வாழ்வியலின் மேன்மைகளை இலக்கியத்தின் வழி எடுத்தியம்பலாம். இலக்கிய வாசிப்பின் வழி

மனித வாழ்வியலை மேன்மைப் படுத்தலாம். மேற்சொன்ன இரண்டு பணிகளும் சமூக நலனுக்காக மட்டுமே நடந்த வண்ணம் இருக்கின்றன.

கி.பி18 ஆம் நூற்றாண்டைக் காப்பியக் கருவாகக் கொண்டு இன்னுயிராம் தன்னுயிரை சிலுவையில் தந்த இரட்சகர் இயேசுவின் வாழ்வியல் சிந்தனைகள் மனித மாண்புகளை எங்ஙனம் மலரச் செய்கிறது என்பதோடு மட்டுமல்லாமல் காப்பிய இலக்கணமானது காப்பியத்தில் எங்ஙனம் பொருத்தப்பட்டுள்ளது என்பதையும் காப்பியத் தலைவனின் வரலாறு மற்றும் காப்பிய கால சமுதாயத்தின் நிலையையும் நுணுகி ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

கருதுகோள்

திருத்தொண்டர் காப்பியம் 21 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாயினும் அஃது காப்பியத் தன்மையைப் பெற்றுள்ளது என்பதையும் திருவிதாங்கூர் சமஸ்தான மக்களிடையே சாதி மற்றும் மதத்தின் மூலமாக சமூக ஏற்றத்தாழ்வு நிலவியதால் உயர்வுதாழ்வு கற்பிக்கப்படாத கிறிஸ்தவ சமயத்தை மக்கள் தழுவத் தொடங்கினர் என்பதும் இக்காப்பியத்தில் தமிழ் இலக்கியத்தின் தாக்கங்கள் உள்ளது என்பதைக் கருதுகோளாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வு ஆதாரங்கள்

சூ. இன்னாசி அவர்கள் எழுதிய திருத்தொண்டர் காப்பியம் முழுவதும் ஆய்வின் முதன்மை ஆதாரமாகத் திகழ்கிறது. காப்பிய இலக்கணம் கூறும் தண்டியலங்காரம், ஆய்வுத் தொடர்புடைய கட்டுரைகள், திருக்குறள், தொல்காப்பியம், வரலாற்று நூல்கள், இணையச் செய்திகள், இலக்கிய நூல்கள், திருவிதாங்கூர் சமஸ்தானம், காப்பியத் தலைவன் நீலகண்டரின் வாழ்க்கை வரலாற்றுத் தொடர்புடைய நூல்கள் ஆகியன துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

ஆய்வு முன்னோடி

ஆய்வேடு

திருமதி ச.மேகலை**, பேராசியர் இன்னாசியின் திருத்தொண்டர் காப்பியம் - ஓர் ஆய்வு** சென்னை பல்கலைக்கழகம், 2016.

ஆய்வு எல்லை

இவ்வாய்விற்கு எல்லையாக சூ.இன்னாசி அவர்கள் எழுதிய **திருத்தொண்டர் காப்பியம்** மட்டுமே ஆய்வு எல்லையாக அமைகின்றது.

ஆய்வு அணுகுமுறை

ஆய்வில் விளக்கமுறை அணுகுமுறையும், காப்பியத் தலைவனின் வரலாற்றை ஆராய்வதால் வரலாற்று அணுகுமுறையும், கி.பி. 18 ஆம் நூற்றாண்டு சமூகத்தை ஆராய்வதால் சமூகவியல் அணுகுமுறையும், காப்பியத்தோடு தமிழ் இலக்கியத் தன்மைகளையும் ஒப்பிட்டு நோக்குவதால் ஒப்பீட்டு ஆய்வு அணுகுமுறையும், வேதாகம அறங்களை எடுத்தியம்புவதால் தத்துவ அணுகுமுறையும், காப்பிய மாந்தர்களின் ஆளுமைகளுக்கான உளவியல் ஆய்வு அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளன.

ஆய்வுப் பகுப்புமுறை

இவ் ஆய்வேடு முன்னுரை, முடிவுரை உட்பட ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை,

இயல் - 1 திருத்தொண்டர் காப்பியத்தில் காப்பிய இலக்கணம்
இயல் - 2 காப்பியத் தலைவனின் வரலாறு
இயல் - 3 திருத்தொண்டர் காப்பியத்தில் சமுதாயம்
இயல் - 4 திருத்தொண்டர் காப்பியத்தில் தமிழிலக்கியச் செல்வாக்கு
இயல் - 5 திருத்தொண்டர் காப்பியத்தில் வேதாகம அறம்

என இவ்வாய்வானது அமைகிறது.

ஆய்வேட்டின் இறுதியில் ஆய்விற்குத் துணைநின்ற நூற்பட்டியல்களின் விபரம் இடம்பெற்றுள்ளன. களஆய்வில் நீலகண்டர் வாழ்ந்த வாழ்வியல் பகுதிகள், தேவசகாயம் பிள்ளையின் திருஆலயப் படங்களும் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

இயல் - 1: திருத்தொண்டர் காப்பியத்தில் காப்பிய இலக்கணம்

கிறித்துவக் காப்பியங்கள்

கிறித்துவின் போதனைகள் மற்றும் அவரது வாழ்வியலை அடியொட்டி வாழ விரும்பியவர்களே கிறித்துவர்கள் ஆவர். இவர்களது புனித நூல் வேதாகமம் ஆகும். கிறித்துவக் காப்பியங்கள் புனித நூலாகிய விவிலியத்தையும், கிறித்துவின் வாழ்க்கை வரலாற்றையும்

பொருண்மையாகக் கொண்டு படைக்கப்பட்டிருக்கின்றன. இது தவிர இயேசுவின் வளர்ப்புப் பெற்றோர், அவரது சீடர்கள் ஆகியோரையும் தலைமாந்தர்களாகக் கொண்டு காப்பியம் மலர்ந்துள்ளது.

கி.பி. 21ஆம் நூற்றாண்டில் கிறித்துவக் காப்பிய வரிசையில் திருத்தொண்டர் காப்பியமும் 2007 ஆம் ஆண்டு சு. இன்னாசி அவர்களால் படைக்கப்பட்டுள்ளது.

காப்பிய இலக்கணம்

தண்டியலங்காரம் என்னும் நூல் வடமொழியில் தண்டி இயற்றிய காவ்யதர்சம் என்னும் நூலைத் தமிழ்ப்படுத்தி அவரால் இயற்றப்பட்டது. காப்பிய இலக்கணத்தை தண்டியலங்காரம் விரிவாக எடுத்துரைக்கின்றது. தண்டியலங்காரம் போன்றே பிற இலக்கண நூல்களும் அகராதிகளும், காப்பிய இலக்கணத்தைப் பற்றி எடுத்துரைக்கின்றன. அங்ஙனமே, வீரசோழியம் புராணத்திற்கும், காப்பியத்திற்கும் மிகுந்த வேறுபாடு இல்லை என்னும் அடிப்படையில், காப்பிய இலக்கணத்தைத் எடுத்துரைக்கின்றது. பன்னிரு பாட்டியல் காப்பியத்தைத் தலை, இடை, கடை என மூன்றாகப் பிரித்து விளக்குகின்றது. மாறனலங்காரம், வச்சணந்தி மாலை, நவநீதப் பாட்டியல், சிதம்பர பட்டியல், தமிழ்ப் பேரகராதி, அபிதான சிந்தாமணி ஆகிய நூல்களிலும் காப்பிய இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் கூறும் தொன்மை, தோல் முதலான இலக்கிய வனப்புகள் (அழகு) எட்டினையும் காப்பியத்தோடு தொடர்புபடுத்தலாம்.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின் என்ற விதிப்படி, காப்பியங்களின் அமைப்பு அடிப்படையிலேயே இவ்வகை இலக்கணங்கள் அமைந்துள்ளன. தமிழ்க் காப்பியங்களில் இவ்விலக்கண அமைதி பெரும்பாலும் அமைந்துள்ளது. தண்டியலங்காரம் குறிப்பிடுகின்ற காப்பிய இலக்கணத்தின்படி, சொல்லப்பட்ட முப்பத்திரண்டு கூறுகளும் ஒவ்வொன்றாக திருத்தொண்டர் காப்பியத்தோடு பொருத்தி ஆராயப்பட்டுள்ளது.

திருத்தொண்டர் காப்பியத்தின் தலைவனாகிய தேவசகாயம் பிள்ளை அவர்கள் கிறித்துவராக மதம் மாறியதால் அரசாங்கத்தினரால் பல விதங்களில் துன்புறுத்தப்பட்டு இறுதியில் சுட்டுக் கொல்லப்பட்டு வீடு பேறு அடைந்த தன்னிகரில்லாத தலைவனாகவே இக்காப்பியத்தில் படைக்கப்பட்டிருக்கிறார் என்பதனை,

“திருமறையைப் பரப்புகின்ற தொண்ட ராகத்
துறவுநிலை ஏற்றோர்தாம் எங்கும் உண்டு
திருமறைக்காய் உயிர்துறந்த அவருக் குள்ளே
திண்மையராய் இருந்தோரும் பல்லோர் உண்டு
திருமறையைப் பின்பற்றும் குடும்பத்தாருள்

தீராத பற்றுடையோர் சிலரே உண்டு
அருங்குணத்தோர் அவருள்ளே ஒருவ ரான
அருள்தேவ சகாயந்தான் தலைவ ராவார்"

(சூ. இன்னாசி, தி.தொ.கா., பா. 3, ப. 6)

என்ற பாடல் மூலம் அறியலாம். தேம்பிழி மதுக்களி, சிறுவரைப் பெறுதல் ஆகிய இரண்டு காப்பியக் கூறுகளும் திருத்தொண்டர் காப்பியத்தில் இடம்பெறவில்லை.

இங்ஙனம் காப்பிய வரைமுறைகளை எடுத்தியம்பிய திருத்தொண்டர் காப்பியத்தில் அமைந்துள்ள வாழ்த்துதல், வணங்குதல், நாற்பொருளாகிய அறம், பொருள், இன்பம், வீடு மற்றும் தலைவனின் சிறப்பு, இயற்கை சூழல், வாழ்வியல் முறைமைகள் அனைத்தும் ஒப்பு நோக்கி ஆராயப்பட்டுள்ளது.

இயல் - 2: காப்பியத் தலைவனின் வரலாறு

திருத்தொண்டர் காப்பியத்தின் முதன்மைக் கதாப்பாத்திரம் நீலகண்டர். அவரே காப்பியத்தின் தலைமை மாந்தராகவும் திகழ்கிறார். காப்பியத் தலைவனாகிய நீலகண்டர் நம்பூதிரி வாசுதேவருக்கும், நாயர் குல பெண்ணாகிய தேவகி அம்மையாருக்கும் இல்லறத்தின் நல்லறப் பயனாய் 1712 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27 ஆம் நாள் பிறந்தார்.

பிள்ளையின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளை அரும்பு, மலர், காய், கனி என நான்குப் பகுப்புகளாக 1.இளமைப்பருவம், 2.வாழ்க்கையின் திருப்பம், 3.அன்பின் வழி இயேசுவின் அடியவராதல், 4.பாடுகளை அனுபவித்தல் (சகித்தல்) எனும் அடிப்படையில் திருத்தொண்டர் காப்பியத்தை அணுகுவதாக இவ்வியல் அமைகின்றது.

நீலகண்டப்பிள்ளை வளர்ந்து வந்த காலங்களில் சத்திரியர்களையும் பிராமணர்களையும் தவிர மற்ற குலத்தோர் கல்வி கற்க அரசரின் அனுமதி இருந்ததில்லை.

"இதை எதிர்த்து லத்தீன் கத்தோலிக்கர்களின் கொச்சி உதயம் பேரூரில் நடைபெற்ற மாநாட்டின் வழி குரல் கொடுத்தனர். கோவா மொனோஸிஸ் ஆயரின் தலைமையில் நடைமுறைப்படுத்திய பல தீர்மானங்கள் இதற்கு காரணமாகும்"[1] என்ற கருத்தினை முக்தி பேறுபெற்ற வேதசாட்சி தேவசகாயம் பிள்ளை அவர்களின் விரிவான வரலாறு என்ற நூல் எடுத்தாளுகிறது.

நீலகண்டப் பிள்ளையின் மாமனாகிய ராமன்பிள்ளை ஒரு குறிப்பிட்ட படையின் 'நாயக்கராக' வேலை பார்த்து வந்தார். தனது மருமகனாகிய நீலகண்டப் பிள்ளையை ஒரு உயர்ந்த மனிதராக உருவாக்க வேண்டுமென விரும்பினார். எனவே, அவர் நீலகண்டப்

பிள்ளையை கரைகண்ட முத்தப்பப் பிள்ளையின் கலா சாலைக்கு கல்வி கற்க அனுப்பினார். என்பதைப் பின்வரும் பாடலானது எடுத்துரைக்கின்றது.

“குலங்காக்க வந்தமகன் என்றே எண்ணிக்
குலக்கல்வி அத்தனையும் கற்க வைத்தார்
நலங்காக்கும் நாயர்குலம் நாட்டைக் காக்க
நாள்தோறும் செய்பயிற்சி வில்ப யிற்சி
புலம்போற்றும் வாள்சுழற்றப் போர்ப்ப யிற்சி
புதுக்கருவி துப்பாக்கி சுடுப யிற்சி
நிலமாளும் மன்னர்களைப் பாது காத்து
நிற்கின்ற பயிற்சிவரை கற்க வைத்தார்”

- சூ. இன்னாசி, தி.தொ.கா., பா. 263, ப. 65, 66

எனும் பாடலின் வழி காப்பியத் தலைவன், ஆசான் கற்பித்த கல்வியை நன்முறையில் கற்றுத் தேர்ந்ததோடு வில்வித்தை, வாள் வித்தை, துப்பாக்கிச் சுடு பயிற்சி மற்றும் வர்மக் கலைகளையும் கற்றுத் தேர்ந்தார்.

மன்னனுக்கு அரண்மனையைக் கட்டுதல், நாட்டை அந்நியரின் படையெடுப்பில் இருந்து காக்க மதிலமைத்தல், மக்கள் வறுமையில் வாடாதபடி தானியங்களைச் சேமித்து வைக்க குதிர்வடிவில் களஞ்சியங்களைக் கட்டி வைத்தல், நாடு முழுதும் பாலங்கள் பல அமைத்தல் இது போன்றே இன்னும் பல நற்பணிகளை செய்தமையால் மன்னர் நீலனைப் பாராட்டியதனை அறியலாம்.

காற்றாடி மலையில் வதைக்கப்பட்ட தேவசகாயம் சகாயம் பிள்ளை தனக்காகப் படும் பாடுகளைக் கண்டு அவருக்குச் சகாயம் செய்ய எண்ணிய வேளையில் அவர் முட்டிய இடத்தில் முக வாயில் நீர் அடித்து தேவசகாயம் பிள்ளையின் தாகம் தீர்க்கின்ற அதிசய நிகழ்வானது நடந்தேறியது.

இயல் - 3: திருத்தொண்டர் காப்பியத்தில் சமுதாயம்

சமுதாயம் என்ற சொல்லின் பயன்பாடு, அதற்கான அறிஞர்களின் கருத்து ஆகியவற்றை விளக்கி காப்பிய காலச் சமுதாயத்தை காப்பியத்தின் வழி கண்ணோக்கி அன்றைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஆட்சி முறை சமுதாய நலன்கள், சமூகச் சிக்கல்கள், அதற்கான தீர்வுகள் போன்றவற்றையும், அன்றைய மக்களின் வாழ்வியல் முறைகள், இயற்கை மற்றும் சுற்றுப்புறச் சூழல், பெண்களின் நிலை, கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, தொழில் மற்றும் மக்கள் நலம் பேணல், சாதியக் கட்டமைப்புகள், மதக் கொள்கைகள் என யாவற்றையும்

சு.இன்னாசி அவர்களின் படைப்பான திருத்தொண்டர் காப்பியத்தில் அமைந்துள்ள 18ஆம் நூற்றாண்டு சமுதாயம் எவ்வகைத்தானது என்பதை ஆராய்வதாக இவ்வியல் அமைகிறது.

பெண்கல்வி

இன்றளவிலும் பெரும்பாலான பெண்குழந்தைகள் கல்வி கற்கவியலாத சூழலில் இருக்கின்றனர். அவர்களுக்கான கல்வி மேம்பாட்டினை முன்னெடுக்கும் முயற்சியுடைய அனைவரும் போற்றுதலுக்குரியவர்கள். கேரளாவின் மக்கள்தொகையில் பெண்கள் அதிகம். பெண்கல்வியும் அதிகம். காப்பியச் சூழலில் பெண்கல்விக்கான குரல் கொடுத்திருக்கின்றனர். மேலும், பெண்கள் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சமூகக் கட்டுப்பாடுகளைக் கடந்து பொருளாதாரச் சூழலை உருவாக்கி கல்வி கற்பது சவாலான காரியம் தான். பெண்களின் முன்னேற்றத்திற்குக் குரல் கொடுத்த பல முற்போக்குச் சிந்தனைகளின் அடிப்படையில் காப்பியப் பாடல் அடிகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை,

யாரெல்லாம் பெண்கள்தமை அனுப்ப வில்லை
யாரெல்லாம் செலவழிக்கும் நிலையில் இல்லை
பேரெல்லாம் கணக்கெடுத்துக் குறித்துக் கொள்க!
பேராசான் பல்லோரைச் சேர்க்க முனைக!
ஊரெல்லாம் கூடங்கள் உருவா கட்டும்!
உருவாக்கும் கூடங்கள் நிறைவா கட்டும்!
காரெல்லாம் விற்றுவரும் பணத்தைக் கொண்டு
கல்விதனை வளர்த்திடுக என்றான் மன்னன் (பா.759)

என்பதற்கேற்ப எடுத்தியம்பியிருப்பது, அரசாளும் மன்னன் மனது வைத்தால் பெண்கல்வி தடையல்ல என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. உலகெங்கிலும் உள்ள அனைத்து பெண் குழந்தைகளும் கல்வியால் மேம்பட அவர்களுக்கான சமூக மற்றும் பொருளாதாரத் தடைகளைக் களைய மன்னன் மார்த்தாண்ட வர்மன் போல் அனைத்து அதிகார வர்க்கத்தினரும் திட்டமிட்டுச் செயல்பட வேண்டியது இன்றைய காலகட்டத்தின் அவசியமாகிறது என்பதனையும் காப்பியம் முன்வைக்கிறது.

இயல் - 4: திருத்தொண்டர் காப்பியத்தில் தமிழிலக்கியச் செல்வாக்கு

திருத்தொண்டர் காப்பியத்தில் தமிழ் இலக்கியத்தின் சொல்லாடல்களும் கருத்துகளும் விரவிக் கிடைப்பதைத் தமிழ் இலக்கியப் பாடல் அடிகளுடன் காப்பியப் பதிவுகளையும் பொருத்திக் காண்பதாக இவ்வியல் அமைகிறது.

உலகில் தோன்றிய மொழிகளுள், "தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை நிலைத்த புகழோடு விளங்கும் மிகச்சில மொழிகளுள் 'உயர்தனிச் செம்மொழி' என்ற சிறப்புடன்

விளங்குவது தமிழ்மொழி. இதற்குக் காரணம் தமிழ்மொழியில் உள்ள கருத்து வளமும் பொருட்செறிவும் மிகுந்த இலக்கியங்கள் மற்றும் இலக்கண நூல்களேயாம். அத்தகு சிறப்புமிக்க இலக்கியங்களைச் சங்ககாலந் தொட்டு இன்று வரையிலான கால அடிப்படையில் பல பகுப்புகளாகப் பிரிப்பர். அவ்வகைப் பகுப்புகளுள் சமய இலக்கியம் என்னும் பகுப்பின்கண் இடம்பெறுவது சூ.இன்னாசி அவர்கள் படைத்தளித்துள்ள திருத்தொண்டர் காப்பியமாகும்.

வாழ்வியல் அறம்

பொருள் ஈட்டும் தொழிலை மேற்கொள்வது ஆண்களுக்கு உரியது என்றும், இல்லறம் நடத்துதல் பெண்களுக்கு உரிய கடமையாக குறுந்தொகைப் பாடல் எடுத்துரைக்கின்றது. இதனை,

"வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு அவ்ஆடவ ருயிரே" (குறு. 135)

என்னும் பாடல் அடிகளின் வழி அறியலாம். மேற்கண்ட பாடலின் கருத்தானது இப்பாடலோடு ஒப்புநோக்கத்தக்கதாகவும், வாழ்வியலை எடுத்துரைக்கும் பாடலாகவும் அமைகிறது என்பதை

"மனையதனுள் மடவார்தம் அடக்கம் கொண்டு
மனைச்சிறப்பு தனையுயர்த்தி மகிழ்தல் போல
வினையாற்றி வருந்தலைவன் களைப்பு நீங்க
வீடதனில் மனையவள்தான் முனைதல் போல" (தி.தொ.கா. 177)

என திருத்தொண்டர் காப்பியப் பாடலில் பதிவு செய்திருப்பதனை அறியலாம்.

ஔவையாரால் பாடப்பெற்ற அதியமான் மற்றும் கபிலரால் பாடப்பெற்ற பாரி ஆகிய கொடை வள்ளல்களைக் குறிப்பிட்டு அவர்களைச் சேப்பியார் என்பாருக்கு உவமையாக வைத்து,

"அதியமான் பாரி அவர்போல் கொடையாய்
அள்ளிக் கொடுக்கும் சேப்பியார் காக்க" (தி.தொ.கா. 4133)

என்று பாடியுள்ளார் இன்னாசி அவர்கள்.

தமிழ்மொழியின் ஏனைய செவ்வியல் இலக்கியங்கள் போலவே யாப்பமைதியும் பொருள்வளமும் மிகுந்த இலக்கிய நூலாக இந்நூல் அமைகின்றது. காப்பிய வளர்ச்சிக்கேற்ற வகையில் தமிழ் இலக்கியங்களின் செல்வாக்கு என்பதை ஆராய்வதாக அமைகிறது.

இயல் - 5: திருத்தொண்டர் காப்பியத்தில் வேதாகம அறம்

கிறித்தவர்களின் புனித நூலாகிய பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள அறச் சிந்தனைகளை சூ. இன்னாசி அவர்கள் தம் காப்பியத்தில் பயன்படுத்தியுள்ள விதத்தினை பருந்து பார்வைக் கொண்டு ஆராய்வதாக இவ்வியலானது அமைகிறது.

கிறிஸ்துவின் போதனைகளுள் தலையாயது மலைப்பொழிவே என்று கூறினால் மிகையாகாது. இப்பகுதியில் ஒவ்வொரு மனிதனும் எங்ஙனம் நடந்து கொள்ள வேண்டும் என்ற தத்துவார்த்த நெறிமுறையினைப் போதித்துள்ளார். மேலும், இதில் எண்வகையான குணாதிசயங்களை விளக்குகிறார். சாந்தக்குணம் என்பது அன்பு, அடக்கம், பிறர் நலம் பேணல், தியாகம், பொறுமை, மென்மை, துணிவு என்ற பண்புகளின் பெட்டகம் ஆகும். இப்பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் இப்பண்பு கட்டாயம் இருக்க வேண்டும்.

> **“சாந்தகுணம் உள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்”**
>
> **- பரிசுத்த வேதாகமம், மத்தேயு, அ:5, வ:5**

என்கிறது வேதாகமம்.

‘பாக்கியம்’ என்ற சொல்லிற்கு தன்னிறைவு, பேறுப்பெறுதல் என்ற பொருள் உண்டு.

‘பூமியை சுதந்தரித்துக் கொள்ளுதல்’ என்பது, பூமியில் வாழும் மனிதர்களைத் தனது உறவாக்கிக் கொள்ளுதல் என்ற பொருண்மையுள் அடங்கும்.

சாந்தகுணம் உள்ள மனிதன் தனக்கு ஏற்படும் கசப்பான அனுபவங்களை அழிக்க முயலுகிறான். அதனால் அவன் உள்ளம் ஒளிர்கிறது. அதுவே இப்புவியில் உள்ள அனைவருக்கும் அவனை பண்பாளனாக காண்பிக்கிறது. இதனையே திருத்தொண்டர் காப்பிய ஆசிரியர்,

> **“குறியசொல் கனிவுடையார் பேறு பெற்றோர்**
> **குடிநாட்ட அடிமைச்சொத் தாக்கிக் கொள்வர்”**
>
> **- சூ. இன்னாசி, தி.தொ.கா. பா. 3252, ப. 804, வரி 5-6.**

என்னும் பாடல் அடிகளின் வழி எடுத்துரைக்கிறார்.

தொகுப்புரை

- திருத்தொண்டர் காப்பியத்தின் ஒவ்வொரு இயலிலும் எடுத்துரைக்கப்பட்ட கருத்துரைகள் தொகுப்புரையாக இயலின் முடிவில் தரப்பட்டுள்ளன.
- தமிழில் தண்டியலங்காரம் குறிப்பிடும் காப்பிய இலக்கணமானது திருத்தொண்டர் காப்பியம் முழுதும் ஒப்பு நோக்கப்பட்டதில் திருத்தொண்டர் காப்பியமானது காப்பியத் தகுதியைப் பெற்றுள்ளது.
- தண்டியலங்காரம் கூறும் காப்பிய கூறுகளுள் தேம்பிழி மதுக்களி, சிறுவரைப் பெறுதல் ஆகிய இரண்டும் திருத்தொண்டர் காப்பியத்தில் இடம்பெறவில்லை.

- காப்பியத் தலைவனின் வரலாற்றை ஆராய்ந்து நீலகண்டனின் உடல், பொருள், ஆவி அனைத்தையும் கிறிஸ்துவிற்காக ஒப்படைத்தார். அதனால் அவர் தேவசகாயம் பிள்ளை என்னும் புனிதர் ஆனார்.
- தேவசகாயம் பிள்ளை அவர்கள் மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் புனிதராகவே திகழ்கின்றார் என்பது எவராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாத உண்மையாகும்.
- காப்பியத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற சமூகத்தில் சாதிய, சமய வேறுபாடுகள் இருந்ததால் பல பிரச்சினைகள் சமூக நலனைச் சீர்குலைத்தது. அன்றைய காலகட்டத்துடன் ஒப்பிட்டு நோக்குகையில் இன்றைய சமகாலத்தில் கல்வி, வேலையில் மட்டுமல்லாது சிந்தனை அறிவிலும் சிறந்து விளங்குவதைக் காணலாம்.
- கிறிஸ்துவ வேதாகம அறங்கள் மனிதனை நெறிப்படுத்தவதாக அமைகிறது. திருத்தொண்டர் காப்பியமும் பரிசுத்த வேதாகம அறங்களின் வழி மனித மனத்தைப் பக்குவப்படுத்தி பண்படுத்தி மானுடம் மேம்படுவதற்கான வழியைக் காட்டுவதனைக் காப்பியத்தின் வழி அறியமுடிகிறது.

பரிந்துரைகள்

'பன்முக நோக்கில் திருத்தொண்டர்க் காப்பியம்' என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது, திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வாழ்ந்து மறைந்த நீலகண்டரின் சமய வாழ்வியலை எடுத்தியம்புவதாக அமைகிறது. இக்காப்பியமானது மேலும் பல ஆய்வுகளைச் செய்ய வழிவகுக்கும். சான்றாக,

- திருத்தொண்டர் காப்பியத்தில் பெண்ணியல்
- திருத்தொண்டர் காப்பியத்தில் சமயநெறி - ஒப்பாய்வு
- திருத்தொண்டர் காப்பிய மாந்தர்கள்

போன்ற தலைப்புகளிலும் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.